**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ATTUR.**

**Sessions Case No.260/2023**

**Prosecution witness 6**

| | |
|---|---|
| **Name** | **: ஆர்.மாதேஸ்வரி** |
| **Father's Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Caste** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |

**(Accused 1 and 2 present. Counsel present. )**

**Solemnly affirmed in accordance with provisions Act of 1873 of the day of 28.10.2024.**

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை **:-**</u>

1) நான் தற்போது மும்முடி கிராம நிர்வாக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. நான் 2007 ல் இருந்து இன்று வரை மும்முடி கிராம நிர்வாக உதவியாளராக பணியாற்றி வருகிறேன். 06.08.2021 ம் தேதி மதியம் 3.00 மணியளவில் மதுவிலக்கு காவல் துறை ஆய்வாளர் போன் செய்து 120 லிட்டர் சாராயத்தை நீதிமன்ற உத்தரவுப்படி அழிக்கவேண்டும் என்றும் அதற்காக சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் கிராம நிர்வாக அலுவலர் உடன் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் அருகில் இருந்த ஆதிதிராவிடர் மகளிர் விடுதி பின்புறம் 3.30 மணியளவில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சென்றறோம் அப்போது சுமார் 100 லிட்டருக்கு மேல் உள்ள சாராயத்தை கேன்னில் இருந்து எரித்து

மதுவிலக்கு காவல் துறை ஆய்வாளர் சாரயத்தை அழித்தார். இது சம்பந்தமாக நான் போலீஸார் அழித்தல் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையெழுத்து செய்தோம். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

2) மகளிர் விடுதிக்கு பின்புறம் வைத்து தான் எரித்தார்கள். எத்தனை போலீஸார் இருந்தார்கள் என்று ஞாபகம் இல்லை. எத்தனை கேன் என்ற ஞாபகம் இல்லை. இரண்டு கேனுக்கு மேல் இருந்தது. அழித்தல் யார் எழுதினார்கள் என்று ஞாபகம் இல்லை. நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து போட்டேன். அது 3 மணிக்கு தான் தயார் செய்தது என்ற விவரம் அழித்துல் மகஜரில் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் போலீஸார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Assistant Session Judge,**
**Attur.**